FREE EDITION

December - 2018



# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 10 -142

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

## சக்தி பீட குடமுழுக்கு விழா

**மே**ல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் கருவறையின் அருகே வலது பக்கமாக அழகின் அம்சமாகவும் உற்சவ தேவியாக கடந்த 40 வருடங்களாக கொளுவிருந்த நம் அன்னை ஆதிபராசக்தி 25.11.2018 அன்று ஞாயிறு காலை புதிதாக கட்டப்பட்டுள்ள 1000 படுக்கை வசதிகளைக் கொண்ட நவீன மருத்துவனையில் அமைந்துள்ள சக்தி பீடத்தில் ஆன்மிக குரு அருள்திரு அம்மாவின் திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டது.

## தருமம் செய்: தானம் செய்:

“சக்தி மாலை அணிந்து கொண்டு வருகிறபோது தொண்டும் செய்ய வேண்டும். ஒரு பத்துப் பைசாவாவது தருமம் செய்ய வேண்டும். அன்னதானம் செய்ய வேண்டும். ஏதோ நன்கொடை கொடுத்துவிட்டால் மட்டும் போதாது.”

-அன்னையின் அருள்வாக்கு

# அவதார காலத்தில் பரம்பொருள்

### நிர்குணப் பிரம்மம்

நிர்குணப் பிரம்மம் என்பது விருப்பு, வெறுப்பு, வேண்டுதல், வேண்டாமை இல்லாதது. பிரபஞ்சத்தின் அழிவுமில்லை, உற்பத்தியுமில்லை. இறந்த ஒரு மனிதனின் உடல் எரிக்கப்படுகிறது. உலகில் அந்த உடல் இல்லை; அழிக்கப்பட்டுவிட்டது என்று உலகியலில் கூறப்படுகிறது.

அந்த உடல் அழியவில்லை. ஆக்ஸைடுகளாகவும், வாயுக்களாகவும் மாற்றப்பட்டு வெளி உலகில் கரைந்து வியாபித்துவிட்டது என்பது அறிவியலின் கூற்று. எலும்பாகவும், தசையாகவும் இருந்த உடல் ஆக்ஸைடாகவும், வாயுக்களாகவும் மாற்றம் பெற்றுவிட்டது என்பது தான் உண்மை.

ஆன்மிகமும் அறிவியலும் இவ்விடத்தில் தான் ஒத்துச் செல்கின்றன. பிரபஞ்சத்தில் எதுவும் அழிவதுமில்லை. உற்பத்தியாவதுமில்லை. ஒவ்வொரு விநாடியும் ஒன்றிலிருந்து ஒன்றாக மாற்றம் பெற்றுக்கொண்டிருக்கிறது. நிர்க்குணப்பிரம்மம் இவை அனைத்துக்கும் சாட்சி மாத்திரையாக நிற்கிறது.

நிர்க்குணப்பிரம்மம் (பரம்பொருள்) அதன் இயல்பிலிருந்து மாறி குணங்கொண்டதாகத் திகழ்வதுமுண்டு. பரம்பொருள் அவதாரமாக வரும்போது குணத்துடன் சம்பந்தப்படுகிறது. விருப்பு, வெறுப்பு, வேண்டுதல், வேண்டாமை எல்லாக்குணங்களையும் அவதார காலத்தில் பரம்பொருள் தன் குணங்களாகக் கொள்கிறது.

முனைவர் சி.ஏ.முத்துக்கிருஷ்ணன்எம்.ஏ., பி.ஓ.எல்.,
கோயம்புத்தூர்

மறவழி சார்ந்த துரியோதனாதிகளை வேண்டாது ஒதுக்குகிறது. அறவழி சார்ந்த பாண்டவர்களை விரும்புகிறது. கொல்வதும் நானே! கொல்லப்படுவதும் நானே! என்று சாட்சி மாத்திரையாய் நின்ற பரம்பொருள் சுக்ரீவன் கொல்லப்பட்டு விடுவானோ என்று மறைந்திருந்தாவது வாலியைத் தாக்குகிறது. ஈண்டு நிர்க்குணனாய் சாட்சி மாத்திரையாய் நிற்கவில்லை. மாறாக, குணங்கொண்டு உருவாக, அவதாரமாக நிற்கிறது.

### குணஞ்சார்ந்த பிரம்மம்

அருள்திரு அடிகளாரை அவதார நாயகன் என்கிறோம். மறஞ்சாறா மாண்புடையார் என்கிறோம். அந்த நிர்க்குணப்பிரம்மம் சாட்சியாய் மட்டும் நிற்காது. குணஞ்சார்ந்து நடத்திய அற்புதத்திலும் அற்புதத்தை இங்குக் காண்போம். அதிலிருந்து அடிகளார் குணஞ்சார்ந்த குறை தீர்க்கும் அறத்தின் நாயகன் என அறிவோம்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“ஆன்மாவைத் தட்டித் தட்டிக் கேட்க வேண்டும். அது பதில் சொல்லும்!.”**

**"ஜோதி"**

**- ஆன்மிக செய்திச்சுடர்**

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப்படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...

**அவதார காலத்தில் பரம்பொருள்**

Page: 1 – 7

**UPCOMING EVENTS**
Melbourne: 10, 13
Sydney: 8, 9

**திருமதி அம்மா பதில்கள்**

பக்கம்: 12

**Divine Miracles**

Page:11

**சித்தர்பீட விழாக்கள்**

பக்கம்: 12

**ஆன்மிக நாட்குறிப்பு**

பக்கம்: 14

**அகண்டத்தில் அம்மா**

பக்கம்: 8 - 9

# அவதார காலத்தில்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

### சீதாராமையர்

மதுரையிலிருந்து செங்கோட்டை செல்லும் சாலையிலே தென்காசியை ஒட்டினாற்போல மேலகரம் என்ற ஊர் உள்ளது. அங்கு சீதாராமையர் என்பவர் இருக்கிறார். இவர் அரசாங்கக் கட்டடங்கள், பாலங்கள் போன்றவற்றைக் கட்டும் ஒப்பந்த வேலை (காண்ட்ராக்ட்) செய்து வருகிறார். பங்களா, கார் மற்ற வசதிகளுடன் வாழ்ந்து வந்தார்.

### நிச்சயதார்த்தம்

இவருக்குத் திருமண வயதிலே ஒரு பெண் இருந்தது. அந்தப் பெண்ணைக் கேட்டு மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தார்கள். பெண்ணைப் பார்த்தார்கள். பிடித்துவிட்டது. நல்ல வாழ்க்கை வசதி உள்ள சீதாராமையரின் பொருளாதார நிலையும் மேம்பட்டிருந்ததால் பெண் கொள்வதிலே மிகவும் விருப்பத்துடனிருந்தார்கள். நல்ல நாளிலே உறவினர்கள், நண்பர்களை அழைத்துத் தடபுடலாக நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர்.

### வழக்கில் எதிராக முடிவு

திருமணம் நடைபெறுவதற்குச் சில நாட்களே இருந்தன. தன் பெண்ணின் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று சீதாராமையர் எதை, எப்படி எப்படிச் செய்யலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்த வழக்கு ஒன்று அவருக்கு எதிராக முடிவாகியது. அதன் காரணமாக இலட்சக்கணக்காக, அரசுக்கு அவர் பணம் கட்ட வேண்டியதாகியது.

### ஏழையானவர்

சீதாராமையர் தன் சொத்துக்களை விற்றார். வீடு, நகை, கார் எதுவும் நிற்கவில்லை. எல்லாவற்றையும் விற்று அரசுக்குப் பணம் கட்டினார். எதுவுமில்லாத ஏழையானார். குடியிருந்த பங்களாவைக் கூட விற்று விட்டதால், தான் ஓகோ என்று ஆடம்பரமாய் வாழ்ந்த அந்த மேலகரத்திலேயே ஒரு சாதாரண வீட்டில் வாடகைக்குக் குடியேறினார்.

### இடி போன்ற செய்தி

தம் சொத்து சுகங்களையெல்லாம் இழந்து துவண்டு போயிருக்கும் சீதாராமையர் குடும்பம் வறுமையால் தத்தளித்தது. அப்போது அந்தக் குடும்பத்துக்குப் பேரிடியாக ஒரு செய்தி வந்தது. சீதாராமையர் மகளைப் பெண் பார்த்து நிச்சயதார்த்தம் செய்துவிட்டுச் சென்ற மாப்பிள்ளை வீட்டுக்காரர்களிடமிருந்து வந்த செய்திதான் அது. "எங்கள் பையனுக்கு இப்போது திருமணம் செய்வதாக இல்லை. ஆகையால் நீங்கள் உங்கள் பெண்ணுக்கு வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்" என்பதுதான் அந்தச் செய்தி.

### துடித்துப் போயினர்

தன் மகளுக்குக் கல்யாணம் முடித்து மணமகனுடன் மங்கலமாக அனுப்பி வைத்துவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தனர் சீதாராமையர் தம்பதியினர்.

ஒரு பெண்ணை ஊரறிய உறவினர் முன் திருமணத்துக்கு நிச்சயம் செய்துவிட்டுப் பின் அந்தப் பெண் வேண்டாம் என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் சொல்லிவிட்டால் பெண்ணின் குடும்பத்தார் நிலை என்னவாகும் என்று எண்ணிப் பாருங்கள். அந்தப் பெண்ணின் மனம் என்ன பாடுபடும்? துடித்துப் போனார்கள் சீதாராமையர் குடும்பத்தினர்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# அவதார காலத்தில்...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

## துக்கத்தின் உருவம்

மாப்பிள்ளை வீட்டார் சீதாராமையர் சொத்துக்களை இழந்து ஏழ்மை நிலை எய்திவிட்டார் என்பதற்காக அவர் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டனர். அதனால் பெண் வீட்டாரை இது மிகவும் பாதித்தது.

சீதாராமையரும் அவர் மகளும் கவலையை மனதில் அடக்கிக் கொண்டு நடைப்பிணமாகத் திரிந்தனர். ஆனால் பெண்களுக்குத் துக்கத்தை அடக்க முடியாது அல்லவா? அவர் மனைவி தன் மகளைப் பார்த்து இவள் கதி இனி என்ன ஆகும், நம்மிடம் நகையும் சொத்தும் இல்லையே!

ஒரு வரன் வேண்டாம் என்று தள்ளிய பின் உலகம் என்ன நினைக்கும்? நம் பிராமணக் குடும்பத்தில் நிச்சயதார்த்தம் செய்து வேண்டாம் என்று சொன்ன பெண்ணை வேறு பிராமணாள் வந்து பெண் கேட்பார்களா? இவளுக்கு இனிக் கல்யாணம் ஆகுமா? என்றதெல்லாம் மனதில் எண்ணிக்கொண்டு மகளைப் பார்த்து அடக்க முடியாமல் அழுதார்.

தன்னை வேண்டாம் என்று தள்ளிவிட்டார்களே என்று துக்கத்தின் உருவாக நின்ற மகள் தன் தாய் அழுவதைப் பார்த்தபோதெல்லாம் தானும் விசித்து விசித்து அழுதாள். குடும்பமே துக்கத்தின் உருவமாக நின்றது.

## ஏன் அழுகிறாய்?

தாயும் மகளும் அடிக்கடி அழுகின்ற குரல் அடுத்த வீட்டில் இருந்தவர்களுக்கும் கேட்டது. வீட்டில் எல்லோரும் சோகமே உருவாகப் போவதையும் வருவதையும் அடுத்த வீட்டில் இருந்தவர்கள் பார்த்தனர்.

ஒருநாள் சீதாராமையர் மகள் வெளியே போகும்போது பக்கத்து வீட்டுக்கார அம்மாள் அந்தப் பெண்ணைக் கூப்பிட்டுப் பேசினார்கள். “ஏனம்மா உங்கள் வீட்டில் எல்லோரும் கவலையாக இருக்கிறீர்கள்? சில சமயங்களில் அழும் குரல் கேட்கிறதே? உங்கள் குடும்பத்தில் என்னம்மா கஷ்டம்?” என்று பரிவுடன் கேட்டார்கள்.

## சொத்து சுகம் போனதைவிட..

அதற்கு அந்தப் பெண் “என்னைப் பெண் பார்த்து நிச்சயம் செய்த பின் என் தகப்பனார் தொழில் நொடித்துப் போய்விட்டார் என்பதற்காகத் தற்போது பிள்ளை வீட்டார் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். இதுதான் எங்கள் குடும்பத்திலே இப்ப பெரிய வருத்தம். சொத்து சுகம் போனதை விட இந்தக் கல்யாணம் நின்று போனதை நினைத்து நினைத்துத்தான் எங்க அப்பாவும் அம்மாவும் ரொம்ப வருத்தப்படறாங்க” என்று சொன்னது.

## மன்றத்துக்கு வா

இதைக் கேட்ட பக்கத்து வீட்டு அம்மாள் மிகவும் வருத்தப்பட்டார்கள். “குடும்பத்தோடு இப்படி வருத்தப்படுகிறீர்கள். இதனால் என்ன பயன்? நம் மேலகரத்தில் ஆதிபராசக்தி மன்றம் இருக்கிறது. உங்கள் கவலையை மன்றத்துக்கு வந்து அன்னை ஆதிபராசக்தியிடம் சொல்லுங்கள். அம்மா நிச்சயம் உனக்கு ஒரு நல்ல வழியைக் காட்டும்” என்று அந்த அம்மாள் சொன்னார்கள்.

## வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்

உடனே அந்தப் பெண், மன்றம் இருக்கும் இடத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டது. பக்கத்து வீட்டு அம்மா மன்றத்துக்குச் சென்று அன்னையை வழிபடக் கூடியவர். அந்த அம்மா அன்னையின் மகிமையைப் பற்றி அந்தப் பெண்ணுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

வெள்ளிக்கிழமை மாலை மன்றத்துக்கு வா என்று சொன்னார்கள். இவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்ட அந்தப் பெண் தன் தாய், தந்தையரிடம் விபரமாகக் கூறியது. சீதாராமையரும் அவரது மனைவியும் தங்கள் மகளோடு அந்த வெள்ளிக்கிழமை மாலையே மன்றத்துக்கு வந்து வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.

## மனமுருக வேண்டினார்

மன்றத்தில் நடைபெற்ற கூட்டு வழிபாடு அவர்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அன்னையின் படத்தைப் பார்த்துக் கண்ணீர் உகுத்தனர். கரை காண முடியாத கப்பல் தத்தளிப்பதைப் போலத் தங்கள் குடும்பம் தத்தளிப்பதையும் பெண்ணுக்குத் திருமணம் நடைபெற வேண்டும் என்பதையும் அம்மாவிடம் மனம் உருக வேண்டினர்.

## இருமுடி செலுத்தினர்

அன்னையை வழிபட்ட சீதாராமையர் குடும்பத்துக்கு மன நிம்மதியும் கிடைத்தது. அவர்கள் அன்னையின் தீவிர பக்தர்கள் ஆனார்கள். அப்போது இருமுடி செலுத்த வேண்டிய காலம் வந்தது. மேலகர மன்றத்தினர் இருமுடி செலுத்துவது பற்றிப் பேசிக் கொண்டனர். இருமுடி செலுத்துவது என்பது என்ன என்ற விபரத்தையும் அதன் மகிமை பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

(4ஆம் பக்க தொடர்ச்சி)

# அவதார காலத்தில்...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

சீதாராமையரும் அவர் மனைவியும் மகளும் இருமுடி கட்டி மருவத்தூர் செல்லப் பெரிதும் விரும்பினார்கள். ஆனால் மூவரும் சென்று வர பணம் இல்லை. மிகவும் சிரமப்பட்டு, பணம் தயார் செய்து மூவரும் மன்றத்தில் இருமுடி மாலை அணிந்தனர். மன்றத்தினருடன் இருமுடி எடுத்துச் சென்று சுயம்புவிற்கு அபிஷேகம் செய்து மாலை செலுத்திவிட்டு வந்தனர்.

## இருமுடியின் பெருமை

அவர்கள் இருமுடி செலுத்தி வந்த சில நாட்களிலே சீதாராமையர் மகளைப் பெண் பார்க்க மதுரையிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தனர்.

அவர்களுக்குப் பெண்ணைப் பிடித்துவிட்டது. சீதாராமையர் எல்லா உண்மைகளையும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களிடம் கூறிவிட்டார். பெண்ணுக்குத் தம்மால் அதிகமாக எதுவும் செய்ய முடியாது என்பதையும் கூறினார்.

மாப்பிள்ளை வீட்டார் எதுவும் கேட்கவில்லை. பெண் கொடுத்தால் அதுவே போதும் என்றார்கள். வேறு ஒரு மாப்பிள்ளைக்கு நிச்சயம் செய்த பெண் என்று தெரிந்திருந்தும் பெண்ணுக்கு எதுவும் செய்ய வேண்டாம் என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் கொடுத்தால் போதும் என்றார்கள். இதற்குக் காரணம் என்ன?

சீதாராமையர் குடும்பத்தினரே தங்கள் பெண்ணை இப்படி ஒரு வரன் வீட்டுக்காரர்கள் வந்து கேட்பார்கள் என்று நினைக்கவில்லை. ஆனால் ஆலயம் சென்று மூவரும் இருமுடி செலுத்தி வந்த பெருமைதான் தங்கள் பெண்ணை வேறு இடத்திலிருந்து பெண் பார்க் வந்திருக்கிறார்கள் என்று அந்தக் குடும்பத்தினர் உணர்ந்தார்கள்.

## குருவைக் கேட்க வேண்டும்

பெண் கொடுக்கச் சம்மதமா? என்று பிள்ளை வீட்டுக்காரர்கள் கேட்டனர். அதற்கு சீதாராமையர் "எங்கள் குருவைக் கேட்டுத்தான் உங்களுக்குப் பதில் சொல்ல முடியும்" என்றார்.

"உங்கள் குருநாதர் யார்? எப்போது கேட்டுச் சொல்வீர்கள்?" என்று கேட்டனர். "மேல்மருவத்தூர் அடிகளார் தான் எங்கள் குருநாதர். அவரைக் கேட்டுத்தான் பதில் சொல்ல முடியும். அவர் பெண் கொடு என்றால் கொடுப்பேன். வேண்டாம் என்றால் பெண் கொடுக்க மாட்டேன்" என்றார் சீதாராமையர்.

"அப்படி என்றால் உங்கள் குருவைக் கேட்ட பின் எங்களுக்கு உங்கள் முடிவை எழுதுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பிள்ளைவீட்டார் புறப்பட்டுச் சென்றனர்.

## குரு தரிசனம்

சீதாராமையர் எந்தச் சலனமும் அடையவில்லை. நேரே மருவத்தூர் வந்தார். ஆலயத்தில் குருநாதரைப் போய்ப் பார்த்தார்.

குருவைப் பார்ப்பதற்கு என்று தனிப்பட்ட முறை இருக்கிறது. தட்டிலே மஞ்சள், குங்குமம், மலர், வெற்றிலை போன்ற மங்கலப் பொருட்களை வைத்துக் குருநாதர் புசிக்க ஏற்ற பழவகைகள் இவற்றோடு குருகாணிக்கையும் வைத்துத் தெய்வத்தின் சன்னதியில் செலுத்துவது போல குருவின் பாதார விந்தங்களில் சமர்ப்பித்து பயபக்தியுடன் பணிய வேண்டும்.

இதிலிருந்து சிறிதும் வழுவாத முறையில் சீதாராமையர் குருநாதரைத் தரிசித்துப் பணிந்தார்.

## என்ன செய்ய?

குருநாதரைப் பணிந்து "அம்மா, பெண்ணுக்கு வரன் வந்திருக்கிறது. நான் என்ன செய்ய?" என்று கேட்டார். சீதாராமையர் "பெண் கொடுத்திடுங்க சார். இந்தக் கல்யாணம் நடந்திடும்" என்று அம்மா திருவாய் மலர்ந்தார்கள்.

இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தம் பெண்ணின் திருமணமானது நிச்சயதார்த்தம் நடந்த பின்னர் நின்று போன நிலையில், வேறு ஒரு மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் பெரும்பாலானவர்கள் பெண் கொடுக்க முடிவு செய்துவிட்டுத் திருமணத்துக்கு ஆசி வாங்க மட்டும் அம்மாவிடம் வருவார்கள். ஆனால் சீதாராமையர் பெண்ணுக்கு வரன் வந்திருக்கிறது, என்ன செய்ய? என்று அம்மாவிடம் முடிவை விட்டார்.

இதைப்போலத்தான் பல பிரச்சனைகளில் தாங்களே முடிவெடுத்துக் காரியம் மேற்கொண்டு ஆசி வாங்க அருள்திரு அம்மாவிடம் வந்து ஆசிபெற்றுச் செல்கிறார்கள். மேற்கண்ட காரியத்தில் ஏதாவது குறை வந்தால் உடனே நான் அடிகளாரிடம் ஆசி பெற்றுத் தானே செய்தேன் என்று மனம் வருந்துகிறார்கள். இது தவறு.

(தொடர்ச்சி...5ஆம் பக்கம்)

## அவதார காலத்தில்...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

என்ன செய்ய வேண்டும் என்று அவதார நாயகனிடம் கேட்டு அவர்கள் கூறியபடி காரியம் மேற்கொண்டால் குறை வர வாய்ப்பில்லை. குறை வந்தாலும் அதை நீக்க அவதார நாயகரால் முடியும்.

### ஆடம்பரம் இல்லாமல்...

மருவத்தூரிலிருந்து மேலகரம் வந்து சீதாராமையர் மாப்பிள்ளை வீட்டாருக்குப் பெண் கொடுக்கச் சம்மதம் தெரிவித்துச் செய்தி அனுப்பினார்.

மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து சீதாராமையருடன் திருமணம் பேசி முடிவு செய்தார்கள். திருமணத்தைப் பழனியிலே ஆடம்பரம் இன்றி, அதிக செலவின்றி நடத்துவதாகச் சொன்னார்கள்.

### மாப்பிள்ளையின் வசதிவாய்ப்பு

முதலில் நிச்சயதார்த்தம் செய்துவிட்டுப் பெண்ணின் தகப்பனார் தொழில் நொடித்துப் போய் காசு பணம் இழந்து போனதால் பெண் வேண்டாம் என்று மறுத்த மாப்பிள்ளை தமிழ்நாட்டில் ஒரு சாதாரண வேலையில் இருந்தார்.

இப்போது முடிவாகி இருக்கும் மாப்பிள்ளை குவைத் நாட்டில் எண்ணெய்க்கிணற்றில் எஞ்சினியராக வேலை செய்கிறார். திருமணத்துக்கு அவர் உடனே வரமுடியாததால் திருமணத் திகதியை இரண்டு மாதம் தள்ளிக் குறிப்பிட்டார்கள்.

### எண்ணெய்க் கிணறு எரிந்தது

திருமணத் திகதி .நெருங்கிக் கொண்டிருந்தது. இரு வீட்டாரும் திருமணத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். திருமணத்துக்கு இன்னும் பதினைந்து தினங்களே இருந்தன.

இந்தச் சமயத்திலே ஈரான் நாட்டுக்கும் குவைத்துக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு ஈரான் குவைத்தைத் தாக்கியது. இந்தப்போர் 1992ஆம் ஆண்டு ஏற்பட்டது. எண்ணெய்தான் வளைகுடா நாடுகளின் செல்வம். எண்ணெயை மையமாக வைத்துக் கருத்து வேறுபாடு தோன்றியதால் ஈரான் குவைத் நாட்டின் எண்ணெய்க் கிணறுகளைக் குறிவைத்து குண்டுமாரி பொழிந்தது.

குவைத் நாட்டில் எண்ணூறுக்கும் மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகள் பற்றி எரிந்தன. சீதாராமையரின் பெண்ணுக்கு ஏற்பாடு செய்துள்ள மாப்பிள்ளை வேலை செய்யும் எண்ணெய்க்கிணறும் எரிந்தது.

### டிக்கெட் கிடைக்கவில்லை

குவைத்தில் வேலை பார்க்கும் வெளிநாட்டுக்காரர்கள் எல்லோரும் தங்கள் தாய்நாட்டுக்குப் பறந்தார்கள். குண்டு மழையில் அகப்பட்டுச் செத்துவிடக்கூடாது என்பதற்காக உள்நாட்டினர் பாதுகாப்பான இடத்தில் பதுங்கினார்கள்.

சீதாராமையரின் மதுரைக்கார மாப்பிள்ளை தமிழ்நாட்டுக்கு வருவதற்காக விமான நிலையம் சென்றார். ஆனால் டிக்கெட் கிடைக்கவில்லை. இருக்குமிடத்துக்குத் திரும்பி வந்தார். மறுநாள் சென்று டிக்கெட் கேட்டார். டிக்கெட் தீர்ந்தது என்று சொல்லி விட்டார்கள். நான்கு நாட்களாக அலைந்தார். இந்தியா செல்லும் விமானத்திற்கு டிக்கெட் கிடைக்கவில்லை.

### உயிருக்கு உத்தரவாதமில்லை

திருமணநாள் மிகவும் நெருங்கி விட்டது. குவைத்திலிருந்து வெளியேற முடியவில்லை. அன்றாடம் குண்டு மாரி மிகுதியாகி எண்ணெய்க் கிணறுகள் வானளாவ எரிந்து கொண்டிருந்தன.

இதற்கிடையே வாழ்பவர்களின் உயிர் எந்த நேரத்திலும் போய்விட வாய்ப்பு மிகுதியாக உள்ளதால் மாப்பிள்ளைப் பையன் மிகவும் நடுங்கிப் போனார். ஊருக்குப் போக முடியவில்லையே என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அறையில் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தார். உயிருக்கு உத்திரவாதம் இல்லாமல் போர் நடுவிலே வாழ்ந்து என்ன செய்வது என்று தெரியாமல் மனமுடைந்து போனார்.

### டிக்கெட் கேட்டு அலைந்தீர்களே

அப்போது தமிழர் ஒருவர் அறைக்குள்ளே நுழைந்தார். “நீங்கள் தமிழ்நாட்டுக்குத்தானே போக வேண்டும். புறப்படுங்கள் போகலாம்” என்றார். “என்னிடம் விமான டிக்கெட் இல்லையே” என்றார் மாப்பிள்ளைப் பையன். இதோ உங்களுக்கும் ஒன்று வாங்கிவிட்டேன் கிளம்புங்கள்” என்றார்.

“எனக்கு டிக்கெட் வேண்டும் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்றார் மாப்பிள்ளை பையன். “நீங்கள் தான் நான்கு நாட்களாக டிக்கெட் கேட்டு அலைகிறீர்களே? நான் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். இன்று தமிழ்நாடு செல்ல எனக்கு டிக்கெட் வாங்கச் சென்றேன். மேலும் ஒரு டிக்கெட் இருந்தது. உங்களுக்காக ஒன்று வாங்கிவிட்டேன். சீக்கிரம் புறப்படுங்கள்” என்றார் வந்தவர்.

(தொடர்ச்சி..6ஆம் பக்கம்)

# அவதார காலத்தில்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

## அவசரப்படுத்தினார்

திருமணத்துக்கு வாங்கிய சாமான்கள் புதிய துணிமணிகள் எல்லாம் ஆங்காங்கே கிடந்தன. அந்தப் பையனுடன் சேர்ந்து அவற்றையெல்லாம் அந்த மனிதரும் சூட்கேஸில் அடுக்கினார். சூட்கேஸை தானே எடுத்துக்கொண்டு அந்தப் பையனை அவசரப்படுத்தினார். இருவரும் விமான நிலையத்துக்கு விரைந்தனர். திருமணத்துக்காக வாங்கிய சாமான்கள், புதுத்துணிமணிகள் எல்லாம் அடங்கிய அந்தப் பெரிய சூட்கேஸை அந்த மனிதர் அனாயாசமாகத் தூக்கிக் கொண்டு ஓடுகின்றாரே! என்று வியந்தார் மாப்பிள்ளைப் பையன்.

## உயிர் வந்தது

குவைத் விமான நிலையத்தில் இருவரும் விமானத்தில் ஏறினர். பக்கத்துப் பக்கத்து இருக்கைகளில் அமர்ந்தனர். விமானம் மேலே கிளம்பி வானிலே பறந்து முன்னேறியது. அப்போதுதான் மாப்பிள்ளைக்கு உயிர் வந்தது.

## காணவில்லை

சென்னை விமான நிலையத்தில் இருவரும் இறங்கினார்கள். பயணிகளின் உடைமைகள் ஒரு பக்கமாக வந்தன. அங்கிருந்து சூட்கேஸை அந்த மனிதர் வாங்கினார். இருவரும் வெளியேறுவதற்காக நடந்தனர். அந்த மனிதர் சூட்கேஸை பையன் கையிலே கொடுத்தார். “இந்தா எப்படியோ சென்னை கொண்டாந்து சேர்த்துட்டேன்” என்றார். மற்ற பயணிகளின் கூட்டத்தின் இடையில் இருவரும் நடந்தனர். கூட்டத்தில் நடந்து வரவர அந்த மனிதரைக் காணவில்லை.

பையன் வாயிலின் நுழைவாயிலின் ஓரமாக நின்று பின்னால் வருகின்றாரா என்று கவனமாகப் பார்த்தார். கடைசி வரை அவரைக் காணவில்லை.

## தவியாய்த் தவித்தார்

குவைத்திலிருந்து டிக்கெட் கிடைக்காதபோது டிக்கெட் எடுத்துக்கொடுத்து, உடன் பயணம் செய்து தன்னைச் சென்னை கொண்டு வந்து சேர்த்த முன்பின் தெரியாத அந்த மனிதருக்கு டிக்கெட்டுக்கான பணம் கொடுக்கவில்லையே.. ஒரு நன்றி கூடச் சொல்லவில்லையே.. எங்கே போனார் அந்த நல்ல மனிதர்? என்று பையன் தவியாய்த் தவித்தார்.

ஆனால் வெகுநேரம் காத்திருந்து தேடியும் அவர் கிடைக்கவில்லை. அவரை எங்காவது சந்திக்கும் வாய்ப்பு வராதா? என்ற ஏக்கத்துடன் பையன் மதுரையில் உள்ள தன் வீட்டுக்கு வந்தார்.

## எல்லையில்லா மகிழ்ச்சி

திருமணத்துக்குச் சில நாட்களே இருந்தன. மாப்பிள்ளை குவைத்திலிருந்து இன்னும் வரவில்லையே என்ற கவலையுடன் மணப்பெண்ணும் அவரது தாயாரும் மதுரை வந்து அன்னை மீனாட்சியைத் தரிசனம் செய்து வழிபடச் சென்றிருந்தனர். அந்த நேரத்தில் பையன் தன் வீட்டில் வந்து இறங்கினார். உடனே மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றிருக்கும் மணமகளுக்கும் அவர் தாய்க்கும் மாப்பிள்ளை குவைத்திலிருந்து நலமுடன் வந்து சேர்ந்துவிட்ட செய்தியை மாப்பிள்ளையின் தம்பி மூலம் சொல்லி அனுப்பினார்கள்.

மாப்பிள்ளை குவைத்திலிருந்து வந்துவிட்ட செய்தி சக்தி தேவியின் சன்னதியில் மணமகளுக்குக் கிடைத்தது. மாப்பிள்ளை வந்துவிட்டதால் இரு வீட்டாரும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள்.

## திருமணத்துக்கு முன் வழிபாடு

திட்டமிட்டபடி ஆடம்பரமில்லாமல் பழனியிலேயே நடத்தினர். மணப்பெண் குடும்பம் அன்னை ஆதிபராசக்தியிடம் பெரும்பக்தி கொண்டது. ஆனால் வேள்வி செய்து ஆதிபராசக்தி வேள்வி முறையில் திருமணம் செய்து கொடுக்க சீதாராமையரிடம் பணவசதி போதவில்லை.

ஆகையால் திருமண மேடையில் மேசை போட்டு செவ்வாடை விரித்து அதில் அன்னை படமும், அடிகளார் படமும் வைத்துப் பெண் வீட்டார் வெறும் வழிபாடு மட்டும் செய்தனர். மணமகள் அர்ச்சனை செய்தார். வழிபாடு முடிந்த பின்தான் திருமண நிகழ்ச்சி தொடங்கியது.

## திடுக்கிட்டு நின்றார்

பழனியில் திருமணம் முடிந்த சில நாட்களுக்குப் பின் பெண் வீட்டுக்கு மேலகரத்துக்கு மணமக்களை அழைத்து வந்தார்கள். மணமக்கள் வீட்டின் உள்ளே நுழைந்தார்கள். புதுமணப்பெண் நேராகப் பெண்கள் இருக்கும் அறைப்பக்கம் போனார். மாப்பிள்ளை முன் அறையிலேயே உட்கார்ந்தார். சற்றுத் தலை நிமிர்ந்ததும் அங்குமாட்டப்பட்டிருந்த அருள்திரு அடிகளார் படத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டு எழுந்தார். “மாமா இங்கே வாங்கோ!”என்று சீதாராமையரைக் கூப்பிட்டார். அவர் என்னமோ ஏதோ என்று பதறிப்போய் ஓடி வந்தார்.

(தொடர்ச்சி..7ஆம் பக்கம்)

# அவதார காலத்தில்...

(6ஆம் பக்க தொடர்ச்சி)

## இவர் யார்?

என்னவோ ஏதோ, மாப்பிள்ளை என்ன குறை கண்டாரோ என்று பதறிப்போய் சீதாராமையர் மாப்பிள்ளை முகத்தைப் பார்த்து "என்ன? என்ன?"என்றார்.

படத்தைச் சுட்டிக்காட்டி, "இவர் யார்? உங்கள் நண்பரா? இவரை கல்யாணத்துக்குக் கூப்பிடலையா? நான் இங்கே எங்குமே இவரைப் பார்க்கவில்லையே?" என்றார். உடனே சீதாராமையர் அருள்திரு அடிகளார் படத்தைக்காட்டி "இவரையா கேட்கிறீர்கள்? ஏன் திடீரென்று விசாரிக்கிறீர்கள்?" என்றார்.

## கூப்பிடவில்லையா?

உடனே மணமகன் நா தழுதழுக்க, "இவர் தான் என்னை குவைத்திலிருந்து சென்னைக்குக்கூட்டி வந்தார். இவர் டிக்கெட் எடுத்துக் கூட்டி வரவில்லை என்றால் நான் இங்கு கல்யாண மணமகனாக இருந்திருக்க முடியாது. விமான நிலையத்தில் இறங்கியதும் அவர் எங்கோ போய்விட்டார்.

உங்கள் வீட்டில் அவர் படத்தை மாட்டியிருக்கிறீர்களே! உங்கள் நண்பராகத்தானே இருப்பார். அவரைக் கல்யாணத்துக்குக் கூப்பிடவில்லையா?"என்றார்.

## குலம் காக்கும் தெய்வம்

உடனே சீதாராமையர் "இவரா உங்களைக் குவைத்திலிருந்து கூட்டி வந்தார?" என்றார். "ஆமாங்க!" என்றார் மாப்பிள்ளை. "இவர் என் நண்பர் இல்லைங்க.. எங்கள் குருநாதருங்க! எங்கள் குலம் காக்கும் தெய்வமுங்க! மேல்மருவத்தூர் அடிகளார் இவர்தாங்க"என்றுக் கூறிக் கண்ணீர் விட்டு அழுதார். இந்த நிகழ்ச்சியை என்னிடம் சொல்லும்போதே சீதாராமையரும் அவர் மனைவியும் கண்ணீர் விட்டனர்.

## பரப்பிரம்மம்

சீதாராமையர் "என்ன செய்ய?"என்று தான் கேட்டார். வேறு முன் விவரங்கள் எதுவும் கூறவில்லை. அதற்கு அம்மா "பெண் கொடுத்திடுங்க சார்! இந்தக் கல்யாணம் நடந்திடும்"என்று சொன்னார்கள். "இந்தக் கல்யாணம்" என்று அம்மா சொன்னதிலிருந்து இதற்கு முன் ஒரு கல்யாணத்துக்காக நிச்சயதார்த்தம் நடந்தது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள் என்பது புலப்படுகிறது.

"நடந்திடும்"என்று கூறியதால் அந்தக் கல்யாணம் நடக்காமல் போனது என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதும் புலப்படும்.

நாம் ஏதும் கூறாமல் எல்லாம் உணரவல்ல பரப்பிரம்மம் அல்லவா அடிகளார்?

## தெளிவு வேண்டுமா?

இந்தக் கல்யாணம் நடந்திடும் என்றபின் நடக்காமற் போகும் சூழ்நிலை போரால் ஏற்பட்டதால் பரப்பிரம்மம் தானே சென்று விமானத்தில் மாப்பிள்ளையை அழைத்து வந்தது.

இந்த அற்புதத்தைப் பலர் நம்பமாட்டார்கள். விக்ரமசிங்கபுரம் மன்றத்தில் நான் சொற்பொழிவுக்காகச் சென்றபோது இலஞ்சியைச் சேர்ந்த சக்தி சீனுவாச பாண்டியன் இந்த அற்புதத்தை முதன் முதலில் என்னிடம் கூறும்போது நானே நம்பவில்லை. ஆனால் மேலகரம் சீதாராமையரையும் அவர் மனைவியையும் நேரில் பார்த்து அவரிடம் கேட்டபின்தான் நம்பினேன்.

## அவதார காலத்தில் பரம்பொருள்

அடிகளாருக்கு என்ன அக்கறை? மணமகனை அழைத்து வந்து திருமணம் செய்விக்க வேண்டும் என்று அடிகளாருக்கு என்ன கடமை? என்று ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

நான் இக்கட்டுரையின் துவக்கத்திலே எழுதிய தத்துவத்துக்கு உங்கள் கேள்வி மூலம் நிரூபணம் கிடைத்துவிடுகிறது. நிர்க்குணப்பிரம்மம் அவதார காலத்தில் குணத்துடன் சம்பந்தப்படுகிறது. விருப்பு, வெறுப்பை அவதார காலத்தில் பரம்பொருள் குணங்களாகக் கொள்கிறது. அடிகளார் அவர்கள் பரம்பொருளின் அவதாரம். அவதார காலத்தில் பரம்பொருள் குணங்களுடன் சம்பந்தப்படுகிறது என்று கண்டோம்.

சீதாராமையரும் அவரது குடும்பமும் அடிகளாரைத் தெய்வமாகக் கொண்டவர்கள். அவதார காலத்தில் பரம்பொருள் தன் பக்தர் மீது அக்கறை கொள்ள குணங்கொண்டதாக அமைகிறது. இது அவதார காலம். அவதார காலத்தில் பக்தர்களுக்காக விரைவாக நல்லது செய்யவும் முடியும்.

அடிகளார் அவர்கள் அவதார காலத்திய பரம்பொருள் ஆவார்கள். பக்தர்களைத் தாங்கும் குணங்கொண்டவர்கள். தன் பக்தனின் குடும்பத்துக்கு இழுக்கு வராமலிருக்கத்தானே சூக்கும உடலில் விமானம் ஏறினார்கள்,
ஓம் சக்தி!

# Sydney - Mandrams - Upcoming Events – December 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 07.12.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.12.2018 | SATURDAY – சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 28.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அகண்டத்தில் அம்மா!

**போடி**நாயக்கனூர் அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு கிழக்கு மன்றம் 27.9.1992ஆம் நாள் நவராத்திரிப் பெருவிழா அன்று ஆரம்பிக்கப்பட்டு அகண்டமும் 2ஆவது நாளில் ஏற்றப்பட்டது.

அகண்டம் ஏற்றப்பட்ட 2ஆவது நாளில் போடி சங்கரதாஸ் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி சிறப்பாக நடந்தேறியது.

அதில் போடி அருகிலுள்ள டி.சிந்தலைச்சேரியில் ஆசிரியராக வேலை பார்க்கும் கிறிஸ்தவ அன்பரான திரு.பெனர்டிட் இசைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஒரு நபர். 29.9.1992 அன்று மன்றத்தில் இசைக்கச்சேரியை முடித்துவிட்டு திரு பெனர்டிட் ஊருக்குச் செல்வதற்காக பஸ் நிலையம் சென்றுள்ளார்.

அங்கே பஸ் கிடைக்காத காரணத்தினால் இரவு மன்றத்திலேயே தங்கிவிட்டுக் காலையில் செல்லலாமெனத் திரும்ப வந்துவிட்டார்.

**வி.சி.தண்டபாணி**
மன்றத்தலைவர்
**அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் வார வழிபாட்டு மன்றம்**
போடிநாயக்கனூர்

மன்றத்தில் அகண்டம் ஒளிவீசிக் கொண்டிருந்தது. அதை மன்றத் தொண்டர்கள் திரு. ரவி, திரு. எஸ்போஜ் மற்றுமுள்ள சக்திகள் இரவு பகலாகக் கண் விழித்து உறங்காது கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஓய்வு எடுக்க வந்த ஆசிரியர் திரு.பெனர்டிட் அவர்களை மன்றத் தொண்டர்கள், "சக்தி! சிறிது நேரம் அகண்டத்தைக் கண் விழித்து உறங்காது கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் சற்று ஓய்வு எடுத்துக் கொள்கிறோம்" என்று கூறி நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்கள்.

ஆசிரியர், மன்றக் கதவைத் தாழ்ப்பாளிட்டு விட்டு அவரும் அகண்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். கவனித்துக்கொண்டிருந்தபோது அவரும் தன்னை மறந்து அயர்ந்து தூங்கிவிட்டார்.

ஆக, மன்றத்தில் மேற்குறித்த அனைவரும் தூங்கிவிட்டனர். அப்போது திடீரென்று ஆசிரியர் திரு.பெனர்டிட் அவர்களை நீல நிறப் பாவாடை சட்டையில் நெற்றியில் பட்டை தீட்டி, குங்குமம் இட்ட சிறுமி, 'சார்! சார்!' என்று எழுப்பியது.
அந்தச்சிறுமி அவர் பள்ளியில் 6ஆம் வகுப்புப் படிக்கும் கவிதா உருவில் இருந்தது. தன்னை எதற்காக எழுப்புகிறது என்று உறக்கத்திலேயே எண்ணிக்கொண்டிருக்கிறார்.

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)


# Sydney - Mandrams - Upcoming Events – November 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 07.12.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

## அகண்டத்தில்....

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும்போதே மீண்டும் 'சார், சார்!' என்று குரல் கேட்டது. மீண்டும் அழைக்கும் குரல் கேட்டு என்ன சத்தம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே மறுபடியும் அதட்டலாக 'சார்! சார்!' என்று அழைக்கும் குரல் கேட்க உறங்கிக் கொண்டிருந்தவர் நினைவு திரும்பியவராக வேகமாக எழுந்து பார்க்கிறார்.

தாழ்ப்பாளிட்ட கதவு திறக்கப்பட்டு இருந்தது. அகண்டத்தைப் பார்க்கிறார். ஒளி வீசிக் கொண்டிருந்த அகண்டம் அணையும் தருவாயிலிருந்தது. வேகமாக அகண்டத்தைச் சரி செய்து ஒளி வீசச் செய்தார்.

ஒளிவீசிக் கொண்டிருந்த அகண்டத்தைக் காப்பதற்கு சிறு குழந்தை வடிவில் அம்மா, கிறிஸ்துவ ஆசிரியருக்குக் காட்சி தந்துள்ளாள். அம்மாவின் கருணையை எண்ணியெண்ணி மகிழ்ந்தோம். அன்று அம்மா தாழ்ப்பாளிட்ட கதவைத் திறந்து தூங்கிக் கொண்டிருந்த கிறிஸ்துவ ஆசிரியரை எழுப்பி ஒளிவீசிக் கொண்டிருந்த அகண்டம் ஒளிமங்கும் நிலையிலிருந்து காப்பாற்றினாள்.

அம்மாவின் பணியைச் செவ்வனே செய்து முடித்திருந்ததினால் தொண்டர்கள் அயர்ந்திருந்தாலும் அம்மாவே அகண்டத்தைக் காப்பாற்றியுள்ளாள். என் பணியைச் செம்மையாகச் செய்தால் உன் பணியை நான் பார்த்துக் கொள்கிறேன் மகனே! என்று கூறியதற்கு இதுவே சான்றாகும்.

ஓம் சக்தி!

## எண்ணங்களும் - பிரச்சனைகளும்:

**"துய்மையான பசும்பால் அருந்தினால் மனிதர்களும், குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்க முடியும். அந்தப் பாலையே காபியாகவும், டீயாகவும் மாற்றி அருந்தும்போது உடம்பின் ஆரோக்கியம் கெடுகிறது. இரத்தமும் கெடுகிறது.**

**அதுபோல மனிதன் தூய்மையான எண்ணங்களோடு இருக்கும்வரை பிரச்சினை இல்லை. பாலுடன் காபித்தூள், டீ தூள் கலப்படம் ஆவது போல தீய எண்ணங்கள் கலப்படம் ஆகும்போதுதான் பிரச்சனைகள் உருவாகின்றன."**

- அன்னையின் அருள்வாக்கு

## Melbourne - Mandrams – Upcoming Events – December 2018



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)



| | | | |
|---|---|---|---|
| 07.12.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.12.2018 | SATURDAY – சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 28.12.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

Lalor

Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின்
மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**ww.adhiparasakthi.co.uk**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி ஆன்மிகச் செய்திச்சுடர்


### உலகம் போகிற போக்கு:

"இன்றைய உலகத்தில் 100க்கு 110 பங்கு பொறாமை அதிகமாகிவிட்டது. இனி உழைப்பவனையும் உழைக்கவிடமாட்டான். பிழைப்பவனையும் பிழைக்கவிட மாட்டான்.

இனி வரும் காலங்களில் கடன் கொடுப்பதும் கஷ்டம், வாங்குவதும் கஷ்டம்."

-அன்னையின் அருள்வாக்கு

# Divine Miracles at Melmaruvathur

## You may lose someone in your family:

Mrs. Sarojini Gopalakrishnan was living in Tiruppur. He was a member of Tiruppur Adhi Parasakthi weekly worship centre. Suddenly her husband became very sick. She went to Maruvathur and prayed. She promised to Mother that her husband would do anga pradakshanam once he becomes alright. Everyday she prayed to Mother and gave neem leaves to her husband. He improved very well and became alright.

Suddenly in January 1984, their eldest daughter became very sick. She was in Chennai at that time. They were asked to come to Chennai immediately. Again she prayed intensely. Mother said, “My dear daughter your family is in deep trouble. You may lose one person in the family”. She was shocked and prayed to Mother. Mother said, “I am here to protect you. When you come here next time bring 9 betal leaves, 9 betal nuts and 9 flowers”. There was somebody in the family who was very sick but was saved by Mother’s blessings.


Their daughter got married. Even when the number of invitees increased in numbers, Mother’s blessings were there to take care of everything. One day Mother told her in her dream that she must do Kalasa Pooja. The chakras were also shown by Mother. Those were normally put in temples. Then when they came for revelation next time, they were told that this was done to protect them from evil spirits.

***

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

## குரு உபதேசங்கள்



### நன்கொடையா? பிச்சையா?

“நீ அம்மாவுக்குப் பிச்சை போடவில்லை. அம்மாதான் உனக்குப் பிச்சை போடுகிறது. அப்படி உனக்குப் பிச்சை போட வேண்டியே நன்கொடை கொடுக்கச் சொல்கிறது.”

### அம்மாவும் - நானும்

“அம்மா என்னைக் காப்பாற்றுகிறது. நான் உங்களைக் காப்பாற்றி வருகிறேன்.”

### எனக்கே குழி தோண்டுகிறான்!

“செவ்வாடை அணிந்து கொண்டு எனக்கே குழி தோண்டுபவனையும் என் பக்கத்தில் வைத்துப் பராமரித்துக் கொண்டுதான் வருகிறேன். அவனும் என் பக்தன் தான்.

இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் திருந்த மாட்டானா..?

அதற்காகவேதான் அவனையும் பக்கத்தில் வைத்திருக்கிறேன்.”



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*அம்மா! பக்தி எப்போது புதிராகிறது? எப்போது புனிதமாகிறது அம்மா..?*

சந்தேகத்துடன் கூடிய, நம்பியும் நம்பிக்கையில்லாத பக்தி புதிராகிறது. முழு நம்பிக்கையுடன் கூடிய உண்மையான பக்தி புனிதமாகிறது.

*அம்மா! தற்போது ஆன்மிகம் அதிக வளர்ச்சியை அடைந்துள்ளதா? அல்லது வளர்ச்சியடைந்தது போன்றதொரு மாயைதானா அம்மா?*

அக்கால தலபுராணங்கள், இதிகாசங்கள், ஆன்மிக அனுபவங்கள் இவற்றைத் தற்கால ஆன்மிகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆன்மிகம் அதிக வளர்ச்சி அடைந்துள்ளது என்று சொல்ல முடியாது. அக்கால ஆன்மிகம் மனித வாழ்க்கையோடு இணைந்து காணப்பட்டது. மனிதனின் பரிணாம வளர்ச்சியாலும், நாகரிகம் என்ற பெயராலும் மனிதனிடமிருந்து ஆன்மிகம் பறிக்கப்பட்டுவிட்டது. ஆன்மிகத்தில் உண்டான மூடநம்பிக்கையும் இதற்கு முக்கிய காரணம். ஆன்மிகம் என்பது மூடநம்பிக்கையை வளர்ப்பதாக இருக்கக்கூடாது. இறை நம்பிக்கையை ஊட்டுவதாக இருக்க வேண்டும். ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலமே ஆன்மிக வளர்ச்சியின் உச்சக்கட்டம் என்று சொல்லலாம். அந்தந்த நூற்றாண்டுகளில் பகவான் இராமகிருஷ்ணர், விவேகானந்தர், வள்ளலார், அம்மா போன்ற அவதார புருஷர்கள் தோன்றி ஆன்மிகத்தை எளிமைப்படுத்தி மக்களிடம் கொண்டு சேர்க்கிறார்கள். நாத்திகத்தின் தாக்கமும் ஆன்மிகத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளது. நாத்திகம் என்பது ஆத்திகப் பயிருக்கு களை போன்றது. களையை எடுத்துப் பயிரைக் காப்பாற்றிப் பலன் அடைவது போல, நாத்திகக் கொள்கைகளால் ஆத்திகம் என்றும் அழிந்துவிடாது. களைக்குப் பயந்து யாரும் பயிரிடாமல் இருப்பதில்லை. இன்றைக்கும் ஆன்மிக உணர்வு மக்களிடம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. தொலைத் தொடர்பு சாதனங்களும் ஆன்மிகத்தைப் பரப்புகின்றன. காலையில் எல்லாத் தொலைக்காட்சிகளிலும் ஆன்மிக சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. இந்து முஸ்லிம், கிறிஸ்தவ போதகர்கள் போதனைகளைச் செய்கிறார்கள். தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஆலயத்தில் அர்ச்சனை செய்வது என்பது தொழில். அதை வேதம் படித்தவர்கள் யாராக இருந்தாலும் செய்யலாம் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்துள்ளது. தெய்வத்தைப் பற்றிக் கிண்டலும், கேலியும் ஒரு பக்கம் இருந்தாலும் இறை நம்பிக்கை என்பது அவரவர் தனிப்பட்ட நம்பிக்கை என்பதும் உறுதியாக உள்ளது. மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே ஆன்மிகம் தற்போது அதிக வளர்ச்சி அடையாவிட்டாலும் அழியாமல் பாதுகாக்கப்படுகிறது என்பது உண்மை.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2018 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| கார்த்திகை | 20 | 06.12.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 7 | 22.12.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2018 | செவ்வாய் | **கிறிஸ்மஸ்** |

# Melbourne - Mandrams – Upcoming Events – December 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 02.12.2018 | Sunday | கார்த்திகை | 16 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 07.12.2018 | Friday | கார்த்திகை | 21 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 09.12.2018 | Sunday | கார்த்திகை | 23 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 14.12.2018 | Friday | கார்த்திகை | 28 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 16.12.2018 | Sunday | மார்கழி | 01 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 21.12.2018 | Friday | மார்கழி | 07 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 23.12.2018 | Sunday | மார்கழி | 09 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 28.12.2018 | Friday | மார்கழி | 14 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 30.12.2018 | Sunday | மார்கழி | 09 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**07.12.2018 – வெள்ளி - அமாவாசை, 22.12.2018 – சனி - பௌர்ணமி**

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**கார்த்திகை – அமாவாசை–பௌர்ணமி :**

நற்கதி உண்டாகும். மன நிம்மதி கிடைக்கும்.

**மார்கழி – அமாவாசை–பௌர்ணமி :**

ஆரோக்கிய வாழ்வு உண்டாகும்.எவ்விதத்திலும் பாதிக்கப்படாத நிலையும், நல்ல ஆரோக்கியமும் உண்டாகும்.

## ஆத்ம சக்தி

"பிள்ளைகளால் அறிவால், பெயரால் முன்னேற முடியாது. ஆன்மாவினால்தான் முன்னேற முடியும்."

## தெய்வச் சிலையும் - ஆன்மாவும்

"ஒரு தெய்வச் சிலையை விட ஆன்மாவிற்குச் சக்தி உண்டு."

## ஆன்மா சீராக இருந்தால்..

"பணம் இருந்தால் மனம் இல்லை. மனம் இருந்தால் பணம் இல்லை.
ஆன்மா சீராக இருந்தால் பணம், மனம் இரண்டும் சேரும்."

அன்னையின் அருள்வாக்கு

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01.12.2018 | சனி | கார்த்திகை | 15 | விநாயகர் கதை - 8ஆம் நாள் |
| 03.12.2018 | திங்கள் | கார்த்திகை | 17 | ஏகாதசி |
| 04.12.2018 | செவ்வாய் | கார்த்திகை | 18 | பிரதோஷம் |
| 07.12.2018 | வெள்ளி | கார்த்திகை | 21 | **அமாவாசை விரதம்** |
| 11.12.2018 | செவ்வாய் | கார்த்திகை | 25 | சதுர்த்தி |
| 12.12.2018 | புதன் | கார்த்திகை | 26 | கஜமுக சம்ஹாரம் |
| 14.12.2018 | வெள்ளி | கார்த்திகை | 28 | திருவெம்பாவை ஆரம்பம் |
| 18.12.2018 | செவ்வாய் | மார்கழி | 03 | வைகுண்ட ஏகாதசி |
| 20.12.2018 | வியாழன் | மார்கழி | 05 | பிரதோஷம் - கார்த்திகை |
| 22.12.2018 | சனி | மார்கழி | 07 | திருக்கார்த்திகை – குமாராலய தீபம்<br>**பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 23.12.2018 | ஞாயிறு | மார்கழி | 07 | ஆருத்ரா தரிசனம் |
| 25.12.2018 | செவ்வாய் | மார்கழி | 10 | சங்கடஹர சதுர்த்தி |
| 28.12.2018 | வெள்ளி | மார்கழி | 13 | **திருவிளக்குப் பூஜை**<br>**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி** |
| 01.01.2019 | செவ்வாய் | மார்கழி | 16 | **ஆங்கிலப் புதுவருடப் பிறப்பு** |
| 02.01.2019 | புதன் | மார்கழி | 18 | வைஷ்ணவ ஏகாதசி |
| 05.01.2019 | சனி | மார்கழி | 21 | **அமாவாசை விரதம்** |
| 15.01.2019 | செவ்வாய் | தை | 01 | **தைப்பொங்கல்** |
| 20.01.2019 | ஞாயிறு | தை | 06 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 21.01.2019 | திங்கள் | தை | 07 | **தைப்பூசம்** |


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.